


# 18.09.2026 செய்திகள்

## செமிகான் 2.0 திட்டத்தின் கீழ் சிப் வடிவமைக்கும் 200 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொடங்க இலக்கு

» பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

- செமிகண்டக்டர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக செமிகான் 1.0 திட்டத்துக்கு 2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. மொத்தம் ரூ.1 லட்சத்து 64 ஆயிரம் கோடி மதிப்பிலான 12 செமிகண்டக்டர் உற்பத்தி ஆலைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதுபோல், செமிகான் 2.0 திட்டத்துக்கு கடந்த ஜூலை மாதம் மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அதற்கு ரூ.1 லட்சத்து 27 ஆயிரத்து 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

» 6 தூண்கள்

- 6 தூண்கள் நிறுவ வேண்டும். வடிவமைப்பு, எந்திரங்கள் மற்றும் மூலப்பொருட்கள், உற்பத்தி ஆலைகள், நவீன பேக்கேஜிங், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, திறன் ஆகியவை தான் 6 தூண்கள்.

» சிப் வடிவமைப்பு

- செமிகான் 2.0 திட்டத்தின்கீழ், சிப் வடிவமைப்புதான் முதலாவது தூண். செமிகான் 1.0 திட்டத்தில் 105 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் சிப் வடிவமைப்பை முயற்சி செய்தன. ரூ.800 கோடி முதலீட்டைப் பெற்றன. அது வெறும் தொடக்கம்தான். இந்த தடவை நமது லட்சியம் மிகப்பெரியது. செமிகண்டக்டர் தேவைக்காக நாடு முழுவதும் சிப் வடிவமைக்கும் 200 ஸ்கார்ட் அப் நிறுவனங்களை தொடங்க இலக்க நிர்ணயித்துள்ளோம்.

» 85 ஆயிரம் பேருக்கு பயிற்சி

- 6-வது தூணாக திறமை இருக்கிறது. அதன்கீழ், அடுத்த 10 ஆண்டுகளில் 85 ஆயிரம் வடிவமைப்பு என்ஜினியர்களுக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான்கே ஆண்டுகளில் 70 ஆயிரம் வடிவமைக்க என்ஜினீயர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

SURESH'

## பிறப்பு, இறப்பு பதிவு திருத்தச் சட்டம் அக்.1-இல் அமல்

- பிறப்பு, இறப்பு பதிவில் தாமதத்தைத் தடுக்க ஒழுங்குமுறைகளைக் கடுமையாக்கும் வகையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டம் வரும் அக்.1-ஆம் தேதி முதல் அமலாகவுள்ளது. நாட்டின் பிறப்பு, இறப்பு பதிவை தாமதமின்றி உரிய நேரத்துக்குள் மேற்கொள்ள மக்களை ஊக்குவிக்கும் வகையில் 1969-ஆம் ஆண்டின் பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இதுவரையிலான சட்டத்தின்படி, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்வது கட்டாயம் என்பதுடன் ஓராண்டுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால் மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக நடுவரிடமிருந்து உத்தரவு பெறுவது அவசியம்.
- புதிய சட்டத் திருத்தத்தின்படி, 2 ஆண்டுகள் வரையிலான தாமதத்துக்கு மேற்கண்ட நடைமுறை தொடர்ந்து பொருந்தும். 2 ஆண்டுகளுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால், முதல்நிலை குற்றவியல் மாஜிஸ்திரேட் பிறப்பிக்கும் உத்தரவின் அடிப்படையில் மட்டுமே பதிவு மேற்கொள்ளப்படும். இதற்காக பிறப்பு, இறப்பு பதிவு சட்டம் 1969-இன் 13(3) ஆவது பிரிவில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த திருத்தச் சட்டம் அக்.1 முதல் அமலுக்கு வரவிருக்கிறது. இது தொடர்பான அரசிதழ் அறிவிக்கை புதன்கிழமை வெளியிடப்பட்டது.
- பிறப்பு, இறப்பு பதிவு சட்டம் 2026-இன் 1-ஆவது பிரிவின் 2-ஆவது துணைப்பிரிவின் கீழ் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்ட அமலாக்கம் மேற்கொள்ளப்படுவதாக அரசிதழ் அறிவிக்கையில் இந்திய தலைமைப் பதிவாளர் மிருத்யுஞ்சய் குமார் நாராயண் குறிப்பிட்டுள்ளார்.